# குழந்தைகளுக்கெதிரான பிரச்சனைகள் தொடர்பான புகார் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR) சட்டம் 2007ன் படி உருவாக்கப்பட்ட சட்ட பூர்வமான அமைப்பாகும். இந்த ஆணையமானது அரசியல் சட்டம் மற்றும் இதர குழந்தைகள் உரிமை மீறல் சட்டங்களின் படி /விதிகளின் படி குழந்தைகளுக்கு என அனுமதிக்கப்பட்ட உரிமைகளை பெற்றுத் தருவதனை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மாவட்டங்களுக்கு வருகை தந்து உரிமை மீறல் தொடர்பான புகார்களை பெற்று வருகிறது. அவ்வாறு **தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் அமர்வானது 21.06.2019 அன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற உள்ளது.** இந்த அமர்வின் போது குழந்தைகள் உரிமை மீறல் தொடர்பான புகார்களை குழந்தைகளோ, அவர்களின் பெற்றோர்களோ, பாதுகாவலரோ அல்லது தனி நபர்களோ, தொண்டு நிறுவனங்களோ நேரில் ஆணையத்திற்கு வழங்கலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
மதுரை மாவட்டம்.

இம்முகாமில் அனைத்து பிரிவைச் சேர்ந்த குழந்தைகளும், குறிப்பாக தெருவோர குழந்தைகள், பிச்சையெடுக்கும் குழந்தைகள், பள்ளி செல்வோர், குழந்தைகள் இல்லங்களில் தங்கியிருப்போர், நிறுவனம் சார்ந்த குழந்தைகள் விடுதிகளில் தங்கி பயிலும் / பயிற்சி பெறும் குழந்தைகள் போன்றோர்கள், குழந்தைகள் சட்ட விதிமுறைகள் குறித்த தங்களது கீழ்க்கண்ட புகார்களை நேரிலோ அல்லது e-box எனப்படும் செயலியின் மூலமாகவோ அல்லது ஆணையத்தின் இணையதள முகவரி www.ebaalnidaan.nic.in மூலமாகவும் பதிவு செய்யலாம் அல்லது 20.06.2019 மாலை 4.00 மணிக்குள் தங்களது புகார்களை எழுத்து பூர்வமாக மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கலாம்.

குழந்தைகள் தொடர்பான புகார்கள் :

- குழந்தைகளை பிச்சை எடுக்க தூண்டுதல்.
- காவலரால் துன்புறுத்தப்படும் குழந்தை.
- புறக்கணிக்கப்பட்டதால் குழந்தை மரணம் ஏற்படுதல்.
- தற்கொலை
- ஊடகங்கள் மூலமாக குழந்தை உரிமைகளுக்கு எதிராக நடைபெறும் இன்னல்கள்.
- மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்றும் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள்
- பாலியல் வன்கொடுமை, இழப்பீடு வழங்குதல்.
- மருத்துவ நிராகரிப்பு.
- தாமத சிகிச்சையளித்தல்.
- போதை பொருள் பயன்படுத்துதல்.
- குழந்தைகள் சார்ந்த அனைத்து குறைபாடுகளுக்கும் மறுவாழ்வு அளித்தல்.

மேலும் விபரங்களுக்கு : மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, பிளாட் எண் : 91 & 94, அசோக்நகர் 3வது தெரு, அஞ்சல்நகர், மதுரை மாவட்டம்., தொலைபேசி : 0452 -2642300
மின்னஞ்சல் : **dcpumadurai@gmail.com**